விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 மாசி 16 ஜ. அவ்வல் 3 இதழ் 16

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 28—2—82

**பயிற்சி**

வெல்டிங், வயறிங்,
மோட்டார் இயந்திரவியல்

செய்முறை அறிமுறையுடன் புதிய வகுப்புக்கள் 28-2-82 ஆரம்பம்.

சி. ஈ. ரி.

ஐலண்ட் இன்ஸ்ரிரியூட்,
58. ஸ்ரான்லி வீதி,
(விகாரைக்கு, சமீபமாக)
யாழ்ப்பாணம். (2406)

இந்திய பட்ஜட்:

## துண்டு விழும் தொகை ரூ.1365கோடி

புதுடில்லி, பெப்27.

இந்திய மத்திய அரசாங்கத்தின் 1982—83ம் ஆண்டுகளுக்கான வரவு செலவுத் திட்டம் நிதியமைச்சர் திரு. முகர்ஜியினல் லோகசபையில் இன்று சமர்ப்பிக்கப்பட்டது இந்த வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை 1365 கோடி ரூபாவாகும்.

★ கிளிநொச்சி தனிமாவட்டம்பற்றி

# கூட்டணி உறுப்பினர் எவரும் பேசினல் நடவடிக்கை

## செயற்குழுக் கூட்டத்தில் முடிவு

### 'சங்கரி' கலந்துகொள்ளவில்லை

(ஏ. வி. மாணிக்கம்)

**கிளிநொச்சியைத் தனிமாவட்டமாக்கவேண்டும் என்ற கோரிக்கை பற்றித் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த எந்த உறுப்பினராவது பேசினல், அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதென்று நேற்று நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.**

நல்லூரிலுள்ள கூட்டணிக் காரியாலயத்தில் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி கலந்துகொள்ளவில்லை.

தற்போது எழுந்துள்ள தனிமாவட்ட கோரிகசை பற்றியும் கிளிநொச்சி மக்களின் அபிவிருத்தி தேவைகள் பற்றியும் நேரடியாக அறிந்து அறிக்கை சமர்ப்பிக்க ஐந்துபேர் கொண்ட குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது. இக்குழுவில் சாவகச்சேரி எம். பி. திரு. வி என். நவரத்தினம், வட்டுக்கோட்டை எம், பி. திரு. ரி. திருநாவுக்கரசு, பட்டிருப்பு எம். பி. திரு பூ. கணேசலிங்கம், ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. எம். தம்பிமுத்து ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஒரு மாத காலத்திற்குள் செயற்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

(மா)

யாழ். மாநகரசபையின்

## 4 கூட்டணி உறுப்பினரிடம் விளக்கம் கோர முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் ஒழுங்கற்ற முறையில் நடந்து கொண்டதாகச் செய்யப்பட்ட பகாரையடுத்து நான்கு கூட்டணி மாநகரசபை உறுப்பினர்கள் மீது விளக்கம் கோருவதென நேற்று நடந்த கூட்டணிச்செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

யாழ். மாநகரசபை முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் செயற்குழுவிற்குச்செய்த புகாரைத் தொடர்ந்தே மேற்கண்டவாறு தீர்மானிக்கப் பட்டது.

யாழ். மாநகரசபைக் கூட்டணிஉறுப்பினர்களான திரு. எஸ். சோதிலிங்கம், ஜனுப், சாகுல் கமிட், திரு. தம்பு கந்தையா, திரு. எஸ். முத்தையா ஆகியோர் மீதே சபைக்கூட்டத்தில் ஒழுங்கற்ற முறையில் நடந்து கொண்டதாகப் புகார் தெரிவிக்கப்பட்டது,

(8-ம் பக்கம்பார்க்க)

## தெல்லிப்பளையில் கூட்டணி தலைமைக்காரியாலயம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் இல்லத்தில் தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைமைக் காரியாலயம் இயங்கவிருக்கிறது

தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயற்குழுக் கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டது. இக் கூட்டத்தில் தமிழர்விடுதலைக் கூட்டணியின் உத்தியோக பூர்வமான பத்திரிகையான 'உதய சூரியன்' பத்திரிகையை மீண்டும ஏப்ரல் மாதம் முதல் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது

தலைமைக் காரியாலயம் நிறுவ யாழ்ப்பாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட காணியில், விரைவில் கட்டட வேலைகளை ஆரம்பிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

(மா)

## நிதிசேகரிப்பை ஆரம்பித்து வைத்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நூலக வாரத்தையொட்டி வர்த்தகர்கள், தொழிலதிபர்கள், கைத்தொழிலதிபர்கள் மற்றும் பிரமுகர்கள் ஆகியோரைக்கொண்ட குழுவினரின் நிதி சேகரிக்கும் இயக்

(8ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினர் எனக்கூறி கொள்ளையடித்தனராம் 3 இளைஞர் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரென்று தம்மை அறிமுகம் செய்த 'பெல்ஸ்' அணிந்த மூன்று இளைஞர்கள் வீட்டைச் சோதனையிடப் போவதாகக் கூறி, ஆயுதமுனையில்சோதனையிட்டபின், வீட்டுக்காரரின் 2,000 ரூபா பெறுமதியான தங்கமோதிரத்தைக் கழற்றிச் சென்றனராம். இச்சம்பவம் நெடுந்தீவில் நடந்துள்ளது.

நெடுந்தீவிலுள்ளகதிரவேலு நாகரத்தினம் என்பவரின் வீட்டுக்கு நள்ளிரவு துப்பாக்கியுடனும், கிறிஸ்கத்திகளுடனும் சென்ற இவர்கள் 'நாங்கள் இராணுவத்தினர், உங்கள் வீட்டில் துப்பாக்கி இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது' என்று கூறி வீட்டைச்சோதனையிட்டனராம்.

கதிரையில் படுத்திருந்த சுப்பிரமணியத்தின்கழுத்துக்கு நேரே ஒருவர் கிறிஸ் கத்தியை பிடித்திருக்க, மற்றும் இருவர் வீட்டைச் சோதனையிட்டதாக கூறப்படுகிறது.

இதன்பின் முருகேசு வீட்டைக்காட்டுமாறும் அவரது வீட்டிலும் துப்பாக்கியிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும் கூறினர்களாம்.

முருகேசு வீட்டைக் காட்டுமாறு சுப்பிரமணியத்தைத் துப்பாக்கிமுனையில் கூட்டிச் சென்று வழியில், அவரது 2000 ரூபா பெறுமதியான தங்கமோதிரத்தைக் கழற்றி சென்றனராம்.

இதுபற்றி ஊர்காவற்றுறை பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (மா)

## பாகிஸ்தானில் 2200பேர் கைது!

இஸ்லாமாபாத். பெப் 27.

பாகிஸ்தானில் சுமார் இரண்டாயிரத்து இருநூறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சமூக விரோதிகள் எனக் கருதப்படுவோரே இவ்வாறு கைது செய்யப்பட்டாகதாக பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்துள்ளது இவ்வாறானவர்களில் பெரும்பாலரனவர்கள் தூக்கிலிடப்பட்ட முன்னாள் பிரதமர் திரு. பூட்டோவின் பெயரில் இயங்கும் அலி சுல்பிகார்'' என்ற இயக்கம்

(8ம் பக்கம் பார்க்க)

40,000 ரூபா பெறுமதியான நகைகள்

# நெடுந்தீவில் துப்பாக்கி முனையில் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

வீட்டில் தனிமையில் இருந்த பெண்ணை நான்கு இளைஞர்கள் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி 40,000ரூபாபெறுமதியான நகைகளை கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர்.

நெடுந்தீவு 7ம் வட்டாரத்திலுள்ள அந்தோனிப்பிள்ளை முத்தம்மா என்பவரின் வீட்டிலேயே இக்கொள்ளைச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினமிரவு 4 இளைஞர்கள் கழல் துப்பாக்கியுடன் வந்து பயமுறுத்திவிட்டு வீட்டுச்குள் சென்று தனது நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளை அடித்துள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

யாழ். உதவிப் பொலிஸ் அதிபர் நெவில் பர்ணண்டோ, ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பத்தேவெல தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(மா)

### பாருக்குள்ளே நல்ல நாடு - 5

# பாலசரஸ்வதியின் பாத காணிக்கை!

தமிழிசைச் சங்கத்தின் 49வது சங்கீத மாநாட்டையும் இசைவிழாவையும் தொடங்கிவைத்து, அந்தக் 'கலை அரசி' டாக்டர் திருமதி த. பாலசரஸ்வதி ஆற்றிய அருமைவாய்ந்த தலைமையுரை, கலையுடன் சம்பந்தப்பட்ட அத்தனைபேரும் சம்பந்தப்பட்டதாக இருந்தது.

குரு, நர்த்தகி, பெற்றோர், விமர்சகர், பத்திரிகையாளர், பிரமுகர்கள், சபாக்காரர்கள் என்று இப்படி எல்லோர் தொடர்பாகவும் தனது மனக்கிடக்கைகளை வெளியிட்ட இவரது உரை, மறைமுகமாக சுப்புடுவை மாத்திரமல்ல, பத்மா சுப்ரமண்யத்தையும் நமக்கு நினைவுபடுத்துகிறது. ஆனால் அவர் தமது உரையை வெகு கண்ணியமாக —தெய்வ அர்ப்பணமாகவே சமர்ப்பித்தது அவரின் இயல்பான உயர்வைச் சாற்றிறது; அவரின் உரை இது:

**"இவ்விடயத்தைப் பொதுச் சபையில் சொல்வதா என்று ஒருபுறம் தோன்றினாலும், பொதுச்சபையில் சொன்னாலன்றி இதற்குத் தீர்வு பிறப்பதற்கில்லை என்பதால் சொல்லத் துணிகிறேன்."**

பேசித்தானாகவேண்டும் என்று வந்துவிட்டபின் என் மனதில் தீவிரமாக இருக்கும் சில கருத்துக்களை வெளியிட்டு உங்களுடைய தீர்ப்புக்கு வைக்கலாம் எனத் துணிகிறேன். உரைகளும் பேச்சுக்களும் நிகழ்த்தும்போது குற்றங்கள் இருப்பின், குற்றத்தை நீக்கி குணங்களை ஏற்று கேட்பவர்கள் அவரவர் அறிவுக்கும் மனதிற்கும் பொருந்துமாறு நடைமுறையில் வைத்துக்கொள்வதுதான் உலக நீதி. என்மனதை வருத்தும் சில விஷயங்களை ஆற்றிக்கொள்ள வழி பிறக்குமா என்பதே இவற்றை நான் கூறுவதற்குக் காரணமேயன்றி, மாற்றாரின் மனத்திற்கு வருத்தம் உண்டாக்குவதல்ல. இவ்விதம் மாற்றுக் கருத்துக்கொண்டவர்களும் அவர்கள் கோணத்தில் ஏதோ சில நியாயங்களைக் கொண்டுதான் அவ்வாறு கருதுகிறார்கள் என்பதை நான் புரிந்து கொள்ளாமலில்லை. இந்நிலையில் எனக்கு நியாயமாகப்படுவதை அவர்களுக்கும் இந்தச் சபையோருக்கும் முன்னே சபாபதியான நடராஜப்பெருமானின் சந்நிதானத்திலேயே சமர்ப்பணம் செய்யும் உணர்வோடு எடுத்துக் கூறுகிறேன்.

தொன்றுதொட்டு வந்துள்ள நமது ஆடற்கலை நாள்தோறும் அபிவிருத்தியாக வேண்டும் என்ற ஆசை தற்போது எல்லோரிடமும் பரவிவருகிறது. இதற்கு அடையாளமாகவே தினந்தோறும் ஓர் அரங்கேற்றம் நிகழ்வதை காண்கிறோம்; மிக்க மகிழ்ச்சி. அரங்கேறும் இளம் நடனமணியைப் பெரியவர்கள் வாழ்த்திப் பேசுகிறார்கள். பத்திரிகைகள் சிலாகித்து எழுதுகின்றன. தட்டிக்கொடுத்த உற்சாகப்படுத்தவேண்டும் என்ற அடிப்படையில் இது நியாயமாகத் தெரியலாம். ஆயினும் தற்போது இதில் உலகம் மிகையாகவே செல்கிறது என்பது என் அபிப்பிராயம். கலையின் அபிவிருத்தியையே லட்சியமாகக் கொண்டு அதன் பொருட்டுக் கலையைப் பயில்பவரின் யோக்கியதாம்சங்களைப் போற்றி உற்சாகப்படுத்துவது நல்லதுதான். ஆனால் இப்படிக் கலையிடமே கருத்து உள்ளபோது அதை அப்பியாஸிப்பவரின் தவறுகளை உன்னிப்பாகக் கவனித்து அவற்றை எடுத்துக் கூறித் திருத்தவேண்டியது முக்கியமான கடமையாகிறது. சிலாகிப்பு என்பது கலையைப் பயிலும் தனி நபருக்கு மட்டுமே பெருமை சேர்க்கிறது. தவறுகளைக் கூறுவதுதான் கலையின் பெருமை குறையாமல் காப்பது. தற்காலத்தில் சிலாகிப்பே அதிகமாகியிருப்பதால், கலையின் தரத்தை காக்கவேண்டிய பணியில் பெரும் நலிவே ஏற்பட்டுள்ளது என அஞ்சுகிறேன்.

இதில் இன்னொரு விசித்திரமும் காண்கிறோம். முன்னுக்கு வரவேண்டியவர்களைத் திருத்தும்பொருட்டு விமர்சனம் செய்ய தவறுவது ஒரு பக்கம். மற்றொரு பக்கம் முன்னுக்கு வந்தவர்களை தங்களது சாமர்த்தியத்தையெல்லாம் காட்டித் தோண்டித்துருவி தப்பு கண்டுபிடித்து விமர்சித்து அவர்கள் மனம் புண்படச் செய்வதில் மகிழும் விமர்சகர்களும் இருக்கிறார்கள். இவர்கள் நகைச்சுவை என்று நினைத்து கேலி செய்து எழுதுவது, வாசகர்களுக்குச் சிரிப்பூட்டும்போது, கலையைத் தொழிலாகக் கொண்ட கலைஞருக்கு எவ்வளவு மனவேதனையைஅளிக்கிறது, எவ்வாறு அவர்களைப்பாதிக்கின்றது என்பதை இவர்களுக்கு எடுத்துச் சொல்வார் யாரும் இல்லாதது பரிதாபத்துக்குரியதே ஆகும். இவ்விஷயம் ஒருபுறமிருக்க, தேர்ச்சிபெறவேண்டிய 'நடி'க்குத் திரும்புவோம்.

புகழ்என்பது ஒருமோஹினி. அது அழகாகத்தானிருக்கும். சிறு வயதில் ஒரு குழந்தைக்கு ஊக்கமளித்து உற்சாகப்படுத்தத்தான் வேண்டும். சந்தேகமே இல்லை. ஆயினும், இதனால் அக்குழந்தைதற்பெருமை பெற்று இனி முன்னேற அவசியமில்லை என்றெண்ணி தேக்கநிலை அடையும்படி செய்துவிடக் கூடாது. இது அந்த 'நடி'க்கும் நல்லதல்ல. கலைக்கும் நல்லதே இல்லை. 'கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு' என்று கலை மடந்தையான சரஸ்வதி தேவியே அடக்கமுடன் நினைக்கிறாள் என்பர். இதற்கு மாறாக தேர்ச்சிபெறும் முன்னரே புகழ் மாலை சூட்டினால், தனக்கு தெரியாததில்லை என்ற அகங்காரமும் தானே மனம்போனபடி என்னவேண்டுமானாலும் புதுமைகள் செய்யலாம் என்ற துணிச்சலும் பிறக்கவே வழி செய்தாகிறது. எனவே பெற்றோர்களும், குருமார்களும் இப்படிப்பட்ட புகழ் மொழிகளுக்காக பிரமுகர்களையும், பத்திரிகைக் காரர்களையும் தேடிப்போவதைக் குறைத்துக் கொண்டு, கலை வளரவும் தங்களது குழந்தை அல்லது சிஷ்யை உண்மைக் கலைஞராக வளரவும் உதவி புரியவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

பெற்ற பாசம் என்பது தனி. எனவே இவ்விஷயத்தில் குருமார்கள் வெகு கண்டிப்பாக இருக்க வேண்டுகிறேன். இவ்வாறு நான் சொல்வதை தயவு செய்து தவறாக எண்ணலாகாது. கலை வளர வேண்டும் என்ற ஒரே விசாரத்தில்தான் சொல்கிறேன். என்னை என்குரு கந்தப்பாபிள்ளை அவர்கள் எப்படி வளர்த்து உருவாக்கி விட்டார்கள் என்பதை நினைத்தே இதைச் சொல்கிறேன். இன்று பாலசரஸ்வதி என்றால் ஏதோ கொஞ்சம் தெரித்தவள் என்று நினைத்து உலகமும் கலைநிறுவனங்களும் கௌரவிக்கின்றன என்றால் அதற்குக் காரணம் என் குரு எனக்குப் போதித்த நடனக் கலைப் பத்ததி மட்டுமல்ல, அதை நான் கற்றுக்கொள்கிற போதே அதனால் வரும் புகழுக்கு நான் அஞ்சவும் அதில் நான் செய்த தப்புகளுக்காக கண்டனத்தை மனமார ஏற்கவும்கூட அவர் கற்றுக்கொடுத்ததுதான் காரணம்.

கச்சேரி முடிந்ததும் ரஸிகர்கள் என்னைப் பாராட்ட வந்து, அந்தப் பாராட்டு மொழிகளைக் கேட்டு எனக்கு எங்கே மண்டைக்கனம் ஏறிவிடுமோ என்று பயந்து என் குரு எவ்வளவு சீக்கிரம் கச்சேரி ஸ்தலத்தைவிட்டு புறப்படமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் கிளம்பச் செய்துவிடுவார், வீட்டுக்குப்போய் வீட்டுப் பெரியவர்களும் சிலாகிக்கவும்விடாமல் தம் கண்காணிப்பிலேயே வைத்துக்கொள்வார்.

மறுநாள் நான் என்ன செய்யவேண்டும் தெரியுமா? முதல்நாள் கச்சேரியில் செய்த தப்பிதங்களை எல்லாம் ஒன்று விடாமல் நினைவிற்குகொண்டு வந்து, செய்த தவறு என்ன என்று சொல்வதோடு சரியனமுறையில் செய்திருக்க வேண்டியது எப்படி என்பதையும் ஆடிப்பாடி காட்டவேண்டும்.

அப்போதெல்லாம் எனக்கே அலுப்பும் ஆயாசமுமாகத் தானிருந்தது. ஆனால் பிறகு தான் நாளுக்குநாள் கலை மெருகேறி மெருகேறிஎனக்கே ஆத்ம திருப்தி உண்டாகத் தொடங்கியதிலிருந்தும் என் குருநாதரின் கட்டுப்பாட்டையும் மீறி பாராட்டுடன் ஏகோபித்துவர ஆரம்பித்ததிலிருந்தும் அவரது வெளிச்சடுமை உண்மையில் எனக்கு எப்பேர்ப்பட்ட பெரு நன்மையையும் பேரனுபவத்தையும் தந்திருக்கிறது என்று புரிந்து கொண்டேன். ஆனால் குருவின் வாக்கில் ஒரு 'சபாஷ்' வராதா என்ற தாபம் மாத்திரம் இருக்கத்தான் செய்தது,

பல ஆண்டுகளுக்குப் பிறகு அவரைப் பற்றிபத்திரிகை ஒன்றில் ஒரு கட்டுரை வந்திருந்தது. உடல் நலிந்து தமது அந்திம திசையில் இருந்த அவருக்கு நானே அக்கட்டுரையைப் படித்துக் காட்ட வேண்டியிருந்தது. அதில் ஓர் இடத்தைப் படித்தபோது எனக்கு ஸப்தநாடியும் ஒடுங்கி விட்டது. என்னைப்பற்றி ஏதோ புகழ்ச்சியாகக் குறிப்பிட்டு, இப்படிப்பட்ட பாலா தான் அன்னாரின் பிரதம சிஷ்யை என்று அக்கட்டுரையில் கண்டிருந்ததையும் நானே படித்துவிட்டு, நாவற்றிட அப்படி நிறுத்திக்கொண்டு விட்டேன் உடனே குருநாதர் பரிவொழுக "ஏன் பாலநாகம்மா பயந்து நிறுத்திவிட்டே? என்பிரதம சிஷ்யை, கடைசி சிஷ்யை எல்லாமே நீதான்" என்றார். சுடுசொல்லில் வறுபடப்போகிறோம் என்று நடுங்கிய எனக்கு அம்ருதவர்ஷமாகவே இருந்தது அந்த வார்த்தைகள்! கோடி 'சபாஷ்' போடுவதற்கு மேற்பட்ட இத்தகைய உள்திருப்தியை அநுபவித்துக் கொண்டேதான் இதுவரை என்னை சந்தோஷப்படுத்துவதைவிட, கலையைக் காப்பாற்றவேண்டும் என்று குருநாதர் தமக்கு கெட்ட பெயர் வருவதையும் பொருட்படுத்தாமல் கண்டிப்பும் கட்டுப்பாடுமாக இருந்திருக்கிறார் என்ற உண்மையை அந்த விநாடிதான் உணர்ந்து உருகினேன். சுதந்திரயுகமான தற்காலத்தில் என் குருநாதரைப்போல் கடும் நெறிகளை மேற்கொள்வது இயலாதுதான்.

குருநாதரைப் போலவே தான் எங்கள் குலமுதல்வி அவளுடைய வழிப்பிறந்ததே எங்கள் பூர்வஜன்ம பாக்கியமே. அட்படிப்பட்ட என் பாட்டியாரும் நாங்கள் குற்றம் குறையின்றி எங்கள் வித்தையை அப்பியஸிக்க வேண்டும் என்பதில் வெகு கண்டிப்பு காட்டினார்.

பாட்டியாரோ உட்காரவிட மாட்டாள் எப்பொழுதும் ஸாதகம் செய்து கொண்டு தானிருக்கவேண்டும். பாட்டியாருக்குப் பார்வை மிகவும் மங்கிவிட்ட காலம். அப்போது கூட பகல் நேரங்களில் அவர் ஏதாவது கேட்டால்நான்பதில் சொல்லும்போது குரல் தரையை ஒட்டிய இடத்திலிருந்து வருவதை தன் புத்தி சூக்ஷ்மத்தால் புரிந்து கொண்டு, நான் உட்காராமல் படுத்துக்கொண்டேனென்றுதெரிந்து கொண்டு விடுவாள் அம்மாதிரி சந்தர்ப்பங்களில் அவள் சொல்வது இப்போதும் என் காதில் ஒலிக்கிறது. நேராக ஒன்றும் கண்டித்துச் சொல்ல மாட்டாள். "வித்யாதுராணாம் நஸுகம் நநித்ரா" என்ற ஒரு வசனத்தைத் தூக்கிப் போடுவாள் அதுவே சவுக்கடிக்கு மேலாக என்னை சொடுக்கி விட்டுவிடும்!

எனவே வித்தியார்த்திகள் நன்றாக உழைத்து கலையின் சகல அம்சங்களிலும் பிழையறத்தேர்ச்சி பெறுவதில் அக்கறை செலுத்த வேண்டும். புகழுக்காக படுகிற முயற்சியை உழைப்புக்காக உபயோகித்தால் கலையின் தூய்மையை காப்பாற்றியதாகும்.

இதுவரை நான் சொன்னதையும் விட வருந்தத்தக்க ஓர் அத்தியாயத்தையும் விண்ணப்பித்துக்கொள்ள முற்படுகிறேன். தரக்குறைவான இவ்விஷயத்தைப் பொதுச்சபையில் சொல்வதா என்று ஒருபுறம் தோன்றினாலும் பொதுச்சபையில் சொன்னாலன்றி இதற்குத் தீர்வு பிறப்பதற்கில்லை என்பதால் சொல்லத் துணிகிறேன். நடனக்கலை பற்றி தெரிந்த அல்லது தெரியாத பிரமுகர்களும் பத்திரிகை விமர்சகர்களும் இப்படி ஓர் இளம் 'நடி'க்குப் புகழாரம் சூட்டுவதற்குக் காரணம் என்ன என்று பார்க்கும்போது அநேகமாக அந்த 'நடி' ஒரு பெரிய செல்வாக்குள்ளவரின் பெண்ணாக இருப்பதும் ஒரு காரணம் என்று தோன்றுகிறது 'நடி'யின் பெற்றோர்களுடைய செல்வாக்கு சக்திகரமாக செயல்படுகிற அம்சம் ஒன்று இந்த அத்தியாயத்தில் வருகிறது. அதைச் சொல்வதற்குதான் தயக்கத்தை மீறி துணிவை வரவழைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது அதாவது சுற்றிவளைக்காமல் சொன்னால் ஒரு சபாவில் ஒரு 'நடி'கச்சேரி பெறுவதற்கு பெற்றோரின் அந்தஸ்து, பதவி பணவசதி முதலியன தான் பெருமளவுக்கு வழி செய்வதாகக் கருதப்படுகிறது. நன்றாகத் தெரிந்ததால் சொல்லுகிறேன். பெரிய மனுஷ்யாள் வீட்டுடுப்பெண்ணுக்கு கச்சேரி

[7ம் பக்கம் பார்க்க]

**- மாலி -**

## மே. பெர்லின் வீதிகளில்

'பேனு'

மேற்கு பெர்லின் நகரில் அடைக்கலம் கோரியுள்ள வெளிநாட்டவர்கள் அனைவரையும் சமுதாயப்பணிகளில் ஈடுபடுத்துவதென்று அந்நகரின் ஆட்சியாளர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள்.

அங்கு புகலிடம் தேடியுள்ள வெளிநாட்டவர்களில் பெரும்பாலானவர்கள் ஆசிய நாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்களில் கணிசமானவர்கள் இலங்கையர். இலங்கையரிலும் 99 வீதமானவர்கள் தமிழ் இளைஞர்கள்.

சமுதாயப்பணி என்று குறிக்கப்பட்டதில் வீதிகளைச் சுத்தப்படுத்துவதும் அடங்கும்.

வீதிகளைச் சுத்தம் செய்வதென்றால் இங்குபோல் அங்கு வீதிகளில் குப்பை கூளங்கள் கொட்டிக் கிடக்குமென்றோ மனித அசிங்கம் கிடக்குமென்றோ கொள்ளமுடியாது. வீதிகளில் உறைந்து கிடக்கும் பனிக்கட்டியை வெட்டி அப்புறப்படுத்துவதும் அந்த நாட்டில் வீதிசுத்திகரிப்புத்தான். இது ஒன்றும் தரக்குறைவான வேலையல்ல. மேலும் அந்த இளைஞர்களுக்கு அந்த அரசு வழங்கும் சமூகப்பாதுகாப்புப் படிகளுடன் இந்த தினசரி நான்கு மணிநேர வேலைக்கு 50 மார்க்குகள் அதிகமாக வழங்கப் போகிறது. எனவே சும்மா இருந்து சம்பளம் வாங்காமல் சமூகப்பணி யொன்றையும் செய்ய இவர்களுக்கு இப்பொழுது சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

இங்குள்ள ஒரு தமிழ்ப் பத்திரிகை அங்கு அவர்கள் நகர சுத்தி வேலை செய்ய வேண்டியிருக்கும் என்று இழிவாகக் குறிப்பிட்டிருந்தது. இன்னொரு ஆங்கிலப் பத்திரிகை தமிழ் ஈழம் கோருகிறவர்கள் அங்கு வீதி கூட்டுவது போலவும் 'தமிழ் ஈழம்' என்ற தும்புக்கடையின் மீது ஒருவர் சவாரி செல்வது போலவும் கேலிச்சித்திரம் போட்டிருந்தது. "ஈழத்துக்குப் பாதை சமைக்கிறார்கள்" என்றும் தலைப்பும் இட்டிருந்தது.

இலங்கையரோடு பாகிஸ்தானியர், லெபனான்காரர்களும் முதல்கட்டத்தல் இந்தப் பணியில் ஈடுபத்தப்படவிருக்கிறார்கள். இவர்கள் எல்லாரும் சேர்ந்து தமிழ் ஈழத்துக்குப்பாதை சமைக்கிறார்கள் என்று அந்தக் கேலிச்சித்திரம் கூறுகிறதோ என்னவோ தெரியவில்லை!

## பத்திரிகையாளர் நிலைமை

பத்திரிகையாளர்களுக்கு பென்ஷன் ஏற்படுத்தும் திட்டமொன்றை இராஜாங்கஅமைச்சர் திரு. ஆனந்ததிஸ்ஸடி அல்விஸ் மந்திரிசபையில் சமர்ப்பித்திருப்பதாக ஒரு செய்தி வந்துள்ளது.

பத்திரிகையாளராகவிருந்து அமைச்சர் பதவிக்கு வந்தவர் திரு. அல்விஸ். அதனால் பத்திரிகையாளர்களின் கஷ்டங்களும் அவருக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் அமைச்சரின் இந்தத் திட்டமாகிலும் நடைமுறைக்கு வருமா என்பதில் பத்திரிகையாளர்கள் சந்தேகத்துடன் கேள்வி எழுப்புவதில் நியாயமுண்டு. ஏனெனில் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த காலத்திலிருந்தே அமைச்சர் திரு.ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் பத்திரிகையாளர்களுக்கான ஏதேதோ திட்டங்களையெல்லாம் வகுத்து வருவதாகவும் அவை அமைச்சரவையிலும் கூட சமர்ப்பிக்கபபட்டுவிட்டதாகவும் செய்திகள் வந்தன. பத்திரிரிகை தலையங்கங்களும் கூட எழுதப்பட்டன. அவை வெறும் 'புரளிக்கதை'களா

(7ம் பக்கம் பார்க்க)

புதிய கல்வித் திட்டத்தில்

# இலவசக் கல்வியின் நன்மைகள் கிடைக்குமா?

## உடுப்பிட்டி எம். பி. கேட்கிறார்

[கரவெட்டி]

''இலவசக்கல்வியினால் ஏற்பட்ட வாய்ப்புக்கள் புதிய கல்வித் திட்டத்தின் மூலம் கிடைக்குமா? என்பது கேள்விக்குரியதே. கல்வி வெள்ளை அறிக்கையினால் பணம் கொடுத்து கல்விபெறும் நிலையே உருவாகும்''

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் துன்னாலை கலிகைக் கந்தன் கிராமஅபிவிருத்திச் சங்கத்தின் கைத்தொழில் நிலைய மண்டபத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. க. செல்லத்துரை தலைமையில் கலிகையில் நடைபெற்ற இவ் அடிக்கல்நாட்டு விழாவில் உடுப்பிட்டி எம்.பி. மேலும் பேசுகையில்;

''இந்த நாட்டில் வாழும் தமிழ்மக்களின் உரிமைக்காக, விடுதலைக்காக உழைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே நான் எனது கல்வி அதிகாரிப் பதவியைத் துறந்தேன்

துன்னாலைப் பகுதியின் நிலையை நான் நன்கு அறிவேன். கடந்தவருடம்வரை நாற்பத்தொரு அபிவிருத்தி திட்ட வேலைகள் இந்தக் கிராமத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இன்னும் அவசியமான அபிவிருத்தி வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

''கிராமங்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமானால் கிராம மக்களிடையே மறுமலர்ச்சிஏற்பட வேண்டும். சிறப்பாக பின்தங்கிய சமுதாயத்தில் விழிப்பு ஏற்படவேண்டும்.

''இன்று நாட்டின் நிர்வாகம் பரவலாக்கப்படும் சூழ்நிலை உருவாகி வருகிறது. குறிப்பாக மாவட்ட அபிவிருத்திசபையூடாகப் பரவலாக்கப்படும் இன்றைய கால கட்டத்தில் பின்தங்கிய சமுதாயங்களின் நிலைமையைப் பற்றி எவரும் சிந்திக்கரமல் இருந்தால் அந்தச் சமுதாயம் பலவீனமடையலாம்.

''இலவசக் கல்வியின் மூலம் பின்தங்கிய கிராம மக்களுக்கு முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனல் அந்த முன்னேற்றம் தரப்படுத்தல் முறையினால் தடைப்பட்டது. குறிப்பாக வடபகுதி மக்களுக்கே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அமைச்சர் தொண்டமானின் கோரிக்கைகளுக்கேற்ப கல்விச் சீர்திருத்தம் கொண்டுவர முடியுமானல் வடபகுதி மக்களுக்கும் அப்படி ஏன் உருவாக்கிக் கொடுக்க முடியாது?

''இலவசக் கல்வியினால் அனுபவித்த பல நன்மைகள் புதிய வெள்ளை அறிக்கையினால் கிடைக்குமா என்பது கேள்விக்குரியதாகும். அனேகமாக பணம் கொடுத்துப் படிக்கும் நிலையே கல்வி வெள்ளை அறிக்கையினால் ஏற்படும்'' என்றார்

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஐயாத்துரை பேசுகையில்: கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 52 கிராம அபிவிருத்திச்சங்கங்கள் உள்ளன. ஆனல் கிறந்த முறையில் இயங்குவன சிலவே கிராமக்களின் பூரண ஒத்துழைப்பு பூரணமாகக் கிடைக்காவிடில் கிராம அபிவிருத்திச்சங்கங்கள் நல்ல முறையில் இயங்க முடியாது'' என்றார்,

துன்னாலை தெற்கு கிராம சேவை உத்தியோகத்தர் திரு. செ. அ. ஞானச்சந்திரன் உட்பட இன்னும் பலர் உரையாற்றினார்கள்.

---

மாதகலிலுள்ள

# இந்த நிலையத்தை மாற்றக் கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

மாதகலிலுள்ள யாழ் அபிவிருத்திச்சபையின் பண்டத்தரிப்பு உப அலுவலகப் பிரிவின் இறைச்சிக்கு மாடு வெட்டும் நிலையத்தில் பசுமாடுகளை வெட்டிக் கொன்றபின்பு அவற்றின் வயிற்றில் இருக்கும் கன்றுக்குட்டிகளை சரிவர புதைக்காது அயலில் வீசி விடும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்றுவருவதாக அப்பகுதி மக்கள் பலத்த புகார் தெரிவிக்கின்றனர். அத்துடன் வெட்டப்பட்ட மாடுகளின் கழிவுப்பொருட்களையும் சரியானமுறையில் சம்பந்தப்பட்டவர்கள் புதைக்காது அப்படியே விட்டுவிடுவதால் காகங்கள், நாய்கள் என்பன அவற்றை தூக்கிச்சென்று அயலிலுள்ள வீடுகளில் போட்டுவிடுகின்றனவாம். மேலும் இந்த மாடு வெட்டும் நிலையத்திற்கு சமீபமாக இருக்கும் வயல்காணிகளில் விவசாயம் செய்வோர் தமது மாடுகளை உழுவதற்காக கொண்டுசெல்வதில் பலத்த சிரமம் அடைவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது. உழுவதற்கு சொண்டுபோகும் தமது மாடுகள் இறைச்சிக்காக மாடு வெட்டும் நிலையத்திலுள்ள மணம் காரணமாக வெருண்டு ஓடுகின்றனவாம். இத்தொல்லைபற்றி நடவடிக்கை எடுத்து வேறு இடத்திற்கு இந்த நிலையத்தை அகற்றுமாறு மாதகல் விபுலானந்தர் படிப்பகத்தினர் யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவரை மகஜர் ஒன்றின் மூலம் கேட்டுள்ளனர்.

---

# வண. சிங்கராயருக்கு குருத்துவ 50வது ஆண்டு விழா

(கரவெட்டி)

''இறைவாக்கினரது மேலான பணியைச் சிறந்த முறையில் கொண்டுநடாத்தும் கத்தோலிக்க ஆசிரியர்கள் பேறுபெற்றவர்கள்.''

இவ்வாறு கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபரும், தற்பொழுது மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் ஓய்வு பெற்றுக்கொண்டிருப்பவருமான அருட்திரு. எல். ஏ. சிங்கராய அடிகளார் தமது குருத்துவ ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் எடுத்த தங்க ஜுபிலிவிழாவிற்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். மறைக் கல்விநிலையத்தில் சங்கத் தலைவர் திரு. ஆர். எவ். யோசேவ் தலைமையில் நடைபெற்ற விழாவிற்து வருகைதந்த அடிகளாரை, நிலைய வாயிலில் அணிவகுத்து நின்ற ஆசிரியர் குழாம் பூரண கும்பம்வைத்து ஆலாத்திஎடுத்தார்கள்.

அருட்திரு. சிங்கராயர் அடிக்ளார் தொடர்ந்து பேசுகையில்: ''ஆசிரியர்களின் நிறைவான பணிக்கு ஆட்சியாளர் நிறைவான வேதனத்தை அளிக்கத் தவறினலும், மறுமையில் விண்ணிலே சுடர்விட்டுப் பிரகாசிக்கும் நட்சத்திரங்களாக மிளிரும் பேற்றை எல்லாம் வல்ல இறைவன் நிச்சயம் அவர்களுக்கு ஈந்தேதீருவார்'' என்றார்.

யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட ஆசிரியை அருட். செல்வி லில்லி நீற்ரு வாழ்த்துப்பா பாடினார்! கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. சி. வின்சென்ற், மறைக் கல்வி இயக்குநர் அருட்திரு. ஜே. நீக்கிலஸ் அடிகளார் ஆகியோர் உட்பட இன்னும் பலர் உரையாற்றினார்கள். விழாவில் சுமார் 500க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

---

# நூலகநிதி சேகரிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் பூ. வெற்றிவேலுவின் முயற்சியால் யாழ். நூல்நிலைய கொடிவிற்பனவு நிதியாக 15,000 ரூபாவுக்கு மேல் சேர்ந்துள்ளது. கைதடி வரணிப் பாடசாலைகள் நிதி இன்னும் வந்து சேரவில்லை எனத்தெரியவருகிறது.

---

சாவகச்சேரி

# நவீனசந்தை ஒலிபரப்பிகள் நீதிமன்றத்தில்!

(சாவகச்சேரி)

சாவகச்சேரிநவீனசந்தையில் பூட்டப்பட்டிருந்த ஒலி பரப்பிகள் யாவும் பொலீசாரால் அகற்றப்பட்டதுடன் நீதிமன்றத்தில் நீதிபதி முன் சமர்ப்பிக்கப்பட்டன. அவைகளின் உரிமையாளர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நவீன சந்தைக்கு சமீபமாக பிரபல கல்லூரி ஒன்று இருப்பதும் கோடுகள் இருப்பதும் சுட்டிக் காட்டப்பட்டு இனிமேல் இவ்விதமாக கோட்டிற்கு வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் கடுமையானதண்டனை விதிப்பதோடு பொருட்களை பறிமுதல் செய்யப்படுமென ஆரம்ப நீதிமன்ற நீதிபதி எஸ். யேசுதாசன் எச்சரித்து சம்பந்தப்பட்ட நபர்களை விடுதலை செய்தார்.

முன்னர் இந்த விளம்பர சேவையால் கல்லூரி நடத்த முடியாமலிருக்கிறதெனக் கல்லூரி அதிபர் புகார் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

BAYER

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கும் விவசாய இரசாயனப் பொருட்கள் விற்பனையாளருக்கும்

# ஒரு முக்கிய அறிவித்தல்

மேற்கு ஜேர்மன் பாயர் ஸ்தாபன விவசாய இரசாயன பொருட்களுக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டவர்களே ஏகவிநியோகஸ்தராவார்கள்

யாழ். குடாநாட்டிற்கு ;

**யூனியன் ஏஜென்ஸீஸ்**
50A, பலாலி வீதி,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

கிளிநொச்சிப் பகுதிக்கு :

**N. திருபாலசிங்கம்,**
பாயர் கிருமி நாசினி கடை,
4, அந்தோனிப்பிள்ளை கட்டிடம்,
கரடிப் போக்கு,
கிளிநொச்சி.

**ஹேக்கெம் லிமிட்டெட்,**
400, டீன்ஸ் வீதி,
கொழும்பு—10.

## "யாழ். மாவட்ட அபிவிருத்தியில் கிளிநொச்சிக்கும், பருத்தித்துறைக்கும் இவ்வருடமும் முன்னுரிமையுண்டு"

### யாழ். மாவட்டசபைப் உறுப்பினர் தகவல்

(பச்சிலைப்பள்ளி)

"யாழ். மாவட்ட அபிவிருத்தியில் கிளிநொச்சித் தொகுதிக்கும், பருத்தித்துறைத் தொகுதிக்கும் இவ்வருடமும் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது."

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்து மேற்கண்டவாறு கூறினார்.

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால், தாளையடியில் புதிதாக திறந்து வைக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத் திறப்பு விழாவில் அவர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இவ்விழா சங்கத் தலைவர் திரு. தோ. சவரிமுத்து தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு.மு. தம்பிமுத்து இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றும் போது "யாழ். மாவட்டத்தில் பின்தங்கிய பகுதிகளின் அபிவிருத்தியில்தான் மாவட்ட அபிவிருத்தி கூடிய கவனம் செலுத்திவருகிறார்கள் பருத்தித்துறைகிழக்கின் அபிவிருத்தி கருதியே பருத்தித்துறை தொகுதிக்கும், கிளிநொச்சி தொகுதிக்கும் அடுத்த இடம் அபிவிருத்தியில் காட்டப்பட்டு வருகிறது

தொகுதிகளின் நிதி ஒதுக்கீட்டின்போது பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம், பருத்தித்துறை கிழக்கிலுள்ள ஆழியவளை தொடக்கம் சுண்டிக்குளம் வரை உள்ள இடங்களுக்கு மாவட்ட அபிவிருத்தியில் வழமையாக பணம் ஒதுக்கப்பட்டுவந்ததை சுட்டிக் காட்டியதை அடுத்து இவ்வருடமும் அப்பகுதிக்கு 2 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது."

மாவட்ட அபிவிருத்திச்சபையினால் எமது [எதிர்பார்ப்புகள் எதுவும்கைகூடவில்லை.எல்லாம் பேச்சளவில்தான் இருப்பதாகச் சிலர் கூறுகிறார்கள். அதில் உண்மையுண்டு. ஆனால் நாங்கள் ஆரம்பக் கட்டத்தில்தான் நிற்கிறோம். அதனால் நாம் பொறுமையாக மனந் தளராமல் எமது இலட்சியத்தை முன்னெடுத்துசெல்லவேண்டும்

யாழ். அரசாங்க அதிபரும், மாவட்ட அபிவிருத்திச்சபைச் செயலாளருமான திரு.தேவநேசன் நேசையா உரையாற்றும்போது கூறியதாவது: யாழ் குடாநாடு அபிவிருத்தியடைந்த பகுதிஎன நான் எண்ணியிருந்தேன். ஆனால் இங்கு வந்து பார்த்தபோது. யாழ்.குடாநாட்டுக் குள்ளேயே அபிவிருத்தி அடையவேண்டிய பகுதிகள் இருப்பதை காண்கிறேன். இப்பகுதிகளின் அபிவிருத்திக்கு சலுகைகள் அளிக்கப்பட வேண்டியது அவசியம். பின்தங்கிய பகுதிகளில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் சேவைகள்முக்கியமானதாகும்."

இவ் வைபவத்தில் கூட்டுறவு சிரேஷ்ட ஆணையாளர் திரு. ஜெககாந்தன், பளை உதவி அரசாங்க அதிபர் திரு. சு. முருகவேள், பச்சிலைப்பள்ளி மீனவகூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு.கொ. அ. ஸ்ரனிஸ்லோஸ், தாளையடி கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. மரியதாஸ் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்கள்.

---

### யாழ். மாநகரசபையில்

## ஆங்கிலத்தில் உரை

### அங்கத்தவர் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் ஜனுப் எச். எம். சாகுல்ஹமீட்டும், பிரேரணை ஒன்றை சபையில் சமர்ப்பித்து உரையாற்றினர். இவர் உரையாற்றிக் கொண்டிருக்கும் போது திரு. யோ, அ. செல்வநாயகம் எழுந்து ஆட்சேபித்து குறுக்கிட்டுப்பேசினர்.

ஜனுப் ஹமீட் ஆங்கிலத்தில் குறிப்பிட்ட பிரேரணை சம்பந்தமாக பேசக்கூடாது என்பது அவரின் வாதம் சில நிமிஷங்கள் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்காமல் உரத்த தொனிசில் பேசிக்கொண்டிருந்தார்கள்.

சபைமுதல்வர் திரு.இராஜாவிஸ்வநாதன் திரு. செல்வநாயகத்தைப்பார்த்து இருக்கும்படி பணித்தார். அவர் அதற்கும் செவிமடுக்காமல் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கும் பொழுது, ஜனுப் ஹமீட்டும், திரு. எஸ். தியாகராஜாவும், இது சபையா? சந்தையா? என்று சொல்லிக் கொண்டு சபையை விட்டு வெளியேறினர்கள்.

பின்பு] ஜனுப் ஹமீட் கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டபின்பு வெளியிற் சென்ற இரு உறுப்பினர்களும் சபைக்குள் வற்தார்கள்.

ஜனுப் ஹமீட் கொண்டு வந்த பிரேரணை பின்வருமாறு:

"முழு மாவட்டதிதுக்கும் பயன்படும் வைத்தியசாலையாக இருப்பதால் யாழ்ப்பாணம் அரசினர். வைத்தியசாலையில் மேலதிக எக்ஸ்கதிர் கூறுகளையும் அவை அனைத்திற்கும் புறம்பான இருளறைகளையும் ஏற்படுத்தித் தருமாறு இச் சபை கௌரவ சுகாதார அவமச்சர் அவர்களைக்கேட்டுக் கொள்ளுகிறது.

மேலும் பல்கலைக்கழக வைத்தியக் கல்லூரியைச் சேர்ந்த பயிற்சியளிக்கும் பேராசிரியர்கள் உள்ளடங்க ஏகப்பட்ட யைத்திய மற்றும் சத்திர சிகிச்சை நிபுணர்களால்கோரப் படும் எக்ஸ்கதிர் படங்களில் சுமைக்கு ஈடுகொடுக்கக்கூடியதாகக் கூடுதலான றேடியோ கிறுபேர்ஸ் யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு உடன் நியமிக்கப் படவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகின்றது. (மா)

---

## துரைராசசி

## விடுத்த

## வேண்டுே

(யாழ்ப்ப

"யாழ். மாநக

ஒரு கட்சியின் ஆ

பெறுகிறது. இத

கத்தவர்கன் மட

வரும் கட்டுப்ப

வேண்டும். கொ

சபைபோல்நிர்வா

படுத்தப்படவே

திரு. ஆ.

சபை அங்கத்தவ

த்து உரையாற்

முதல்வர் திரு.

நாதன் குறுக்கி

கொழும்பு

யின் அதிகார

சொல்லும்படி சே

டார்.

இதற்கு திரு.

கம், முதல்வரைப்

களுக்கு சாதகமா

லும் என்னைப்

பாதகமாகப் பே

பேசுகிறீர்கள்

வருத்தப்பங்டார்

பொழுது சப

சிரிப்பொலி எ

---


முதலீட்டாளருக்கு மற்றுமோர் அதி பெரிய ஊக்குவிப்பு

# மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்

# ரூபா 200,000 க்கும் அதற்கும் மே

# வைப்புகளுக்கு மேலும் அதிக வருமா

ஒரு தொகை வைப்பாக இடும் ரூபா 200,000/- இரு வருடங்களில் ரூபா 320,000/- ஆக வளருசி

வருடம் **30%** வரை

MASTERS MC 52/81

| 2 வருட வைப்புக்களுக்கு | 2 வருட வைப்புக்களுக்கு | 1 வருட வைப்புக்களுக்கு | 1 வருட வை |
|---|---|---|---|
| **30%** | **27%** | **26%** | **24** |
| வருட வருமானம் வட்டியும் போனசும் முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படும். | வருட வருமானம் வட்டியும். போனசும் மாதாந்தம்/கால் வருடம்/அரை வருடம் செலுத்தப்படும். | வருட வருமானம், வட்டியும் போனசும் முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படும். | வருட வரும போனசும் மா டம்/அரை வ செலுத்தப்ப |

ரூபா 200,000/- க்கும் குறைவான வைப்புக்கள் வட்டியும் போனசும் முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படுதல்

**2 வருடங்கள் :-**

27% வருட வட்டி ரூபா 100,000/- க்கும் அதிலும் கூடிய வைப்புக்களும்

25% வ. வ. ரூபா 50,000/- இல் இருந்து ரூபா 100,000/- க்கும் குறைந்த வைப்புக்களுக்கு

24% வ. வ. ரூபா 2,500/- இல் இருந்து ரூபா 50,000/- க்கும், குறைந்த வைப்புக்களுக்கு

**ஒரு வருடம்**

22% வ. வ. ரூபா 2500/-ம் அதற்கும் மேற்பட்ட வைப்புக்களும்.

வட்டியும் போனசும் மாதாந்தம், கால் வருடம் அரை வருடம் செலுத்தப்படுதல்

**2 வருடங்கள் :-**

24% வ. வ. ரூபா 100,000/- மும் அதற்கும் மேற்பட்ட வைப்புக்களும்

22% வ. வ. ரூபா 50,000/-இல் இருந்து ரூபா 100,000/- க்கும் குறைந்த வைப்புக்களுக்கு

21% வ. வ. ரூபா 2500/- இல் இருந்து ரூபா 50,000/- க்கும் குறைந்த வைப்புக்களுக்கு.

**ஒரு வருடம்**

20% வ. வ. ரூபா 2500/-ம் அதற்கும் மேற்பட்ட வைப்புக் களும்,

நம்பிக்கைப் பொறுப்பிற்கும் பாதுகா

பின்வரும் புள்ளி விபரங்கள் சான்று

| | 1978/79 | 1979/ |
|---|---|---|
| | (ரூபா) | (ரூப |
| முதலீடு | 2,250,000 | 2,250, |
| ஒதுக்கம் | 7,628,000 | 15,668, |
| வைப்புக்கள் | 72,513,000 | 125.835, |
| கடன்பாடுகள் | 32,589,000 | 2 |
| முதிசச் சொத்து | 135,977,000 | 20 |
| வரியின் முன் லாபம் | 4,764,000 | 3, |
| வரியின் பின் லாபம் | 2,614,000 | 3,821, |
| லாபப் பங்கிடு | 375.000 | 925 |
| (வருட இறுதியில்) | | |

# மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்

இலங்கையில் அதி பெரியதும் உறுதி வாய்ந்ததுமான நிதி நிறுவனம்

6500க்கும் அதிகமான வைப்பாளரின் அதிக நன்நம்பிக்கையைப் பெற்றுத் திகழும் நிறுவன

சிங்கம்

இன்று ...ட்சியில் நடை ...ற்குசபை அங் ...டுமல்ல முதல் ...பட்டு நடக்க ...ழும்பு மாநகர ...ாகம் பன்முகப் ... என்று ...ங்கம் ... பார் ...றிய பொழுது இராஜவிசுவ ...ட்டு,

மாநகரசபை ...ங்கள் பற்றி ...கட்டுக்கொண்

துரைராஜசிங் ...ப்பார்த்து உங் ...கப் பேசினு ... பேசுகிறீர்கள் ...பேசினுலும் ...ள்'' என்று ... (அப் ...லத்த ...மா)

மார்ச் 7-ல் யாழ். மாவட்டத்தில்

# 150 கிராமோதய சபைகள் நிறுவப்படும்

(சித்தன் கேணி)

யாழ். மாவட்டத்தில் மார்ச் மாதம் (ஏழாம்) 7-ம் திகதி சுமார் 150 கிராமோதயசபைகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன. இதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ்ப்பாணம் அரசாங்க செயலகம் மேற்கொண்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை. சாவகச்சேரி ஆகிய மூன்று தொகுதிகளையும் தவிர்ந்த ஏனைய தொகுதிகளான நல்லூர், பருத்தித்துறை, கிளிநொச்சி, உடுப்பிட்டி, கோப்பாய், ஊர்காவற்துறை, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை ஆகிய எட்டுத் தொகுதிகளிலேயே கிராமோதயசபைகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன. ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் ஒவ்வொரு கிராமோதய சபை நிறுவப்படவுள்ளது. இரண்டு கிராமசேவகர் பிரிவுகளுக்கு ஒவ்வொருவராக அண்மையில் நியமனம் செய்யப்பட்ட விசேடசேவை அதிகாரிகள் தலைமையில் அங்குராப்பணம் செய்யப்படவுள்ளது. இவர்களே இச்சபைகளின் பதவிவழிச் செயலாளர்களாவர்.

கிராமோதயசபைகள் இம்மாதம் 7 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கும் நண்பகல் 2 மணிக்கும் அங்குராப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, சாவகச்சேரி ஆகிய தொகுதிகளில் மாநகரசபை, நகரசபைகள் இருக்கும் காரணத்தினாலேயே இங்கு கிராமோதய சபைகள் நிறுவப்படவில்லை.

தற்போது ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவும் இச்சபைகளை அமைக்கும் வேலையில் மும்மரமாக ஈடுபட்டுள்ளது.

மகேஷ் செல்வரட்ணம்:-

# பொலிஸ் ஆணையாளராக பதவி உயர்வு

(கொழும்பு)

கொழும்ப பொலிஸ்தலைமையக, ஆராய்ச்சி அபிவிருத்திப் பணிப்பாளர் திரு. மகேஷ் செல்வரட்ணம் பொலிஸ் ஆணையாளராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

முன்பு பொலிஸ் ஆணையாளராக இருந்த திரு. டக்ளஸ் ரன்முத்துகல பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்வு பெற்றதையடுத்தே மேற்படி பதவிக்கு திரு. மகேஷ் செல்வரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார்.

45 வயதான திரு. செல்வரட்ணம், சிறந்த விளையாட்டு வீரராவார். இவர் பல விளையாட்டுக்கழகங்களிம் பொலிஸ் விளையாட்டுப் பிரிவிலும் அங்கம் வகித்துவருகின்றார். (கி)

# சத்திர சிகிச்சை சங்கத்தின் தேசிய மகாநாடு

(கொழும்பு)

இலங்கை சுயவிருத்தி சத்திர சிகிச்சை சங்கத்தின் இரண்டாவது தேசிய மகாநாடு மார்ச் 1ம், 2ம், 3ம் திகதிகளில் திட்டமிடல் அமைச்சினதும் கொழும்பு மருத்துவ நிலைய குடும்பநல அமைச்சினதும் அனுசரணையுடன் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும். இதனை வைபவ ரீதியாக கொழும்பு ஆஸ்பத்திரிகள் அமைச்சர் ரஞ்சித் அத்தப்பத்து தொடக்கி வைப்பார்.

இந்த மகாநாட்டில் பிரபல இலங்கை மருத்துவ விஞ்ஞானிகள் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பர். ஆசிய நாடுகளில் உள்ள வேறுபல அறிஞர்களும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவார்கள். இந்த சங்கத்தினரின் தலைமை அலுவலகம்கண்டியில் உள்ளது. கண்டியைச் சேர்ந்த பிரபல மருத்துவ நிபுணர்களும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் இந்தச் சங்கத்தின் தலைமைக குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த மகாநாட்டில் சத்திர சிகிச்சைமுறைகள், கருத்தடை சத்திர சிகிச்சையின் சமூக, உளவியல் விளைவுகள், வெளிநாட்டு அனுபவங்கள், மதசார்பான அபிப்பிராயங்கள் போன்ற தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்தப்படும்.

# "போத்தலில் அடைத்த பனங்கள் விற்பனையில் நல்லவருமானம்"

## வட்டு. தெ. ப. கூ. சங்க கணக்காளர் தகவல்

(சங்கானை)

வட்டுக்கோட்டைத்தொகுதியிலுள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் இலங்கையில் முதன் முதலாக பனங்களைப் போத்தலில் அடைத்து வெளியூர்களுக்கு அனுப்பி வைத்து லட்சக்கணக்கான பணத்தை வருமானமாகப் பெறுகின்றது. பதினேழு கிளைகளையுடைய இச் சங்கத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் அங்கத்தவர்களாக விருக்கின்றனர்.

இவ்வாறு மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் கணக்களார் திரு. ஏ. விஜயநாதன் எமது நிருபருக்கு கொடுத்த பேட்டியொன்றில் தெரிவித்தார்.

திரு. ஏ. விஜயநாதன் மேலும் தெரிவித்தாவது: 1980 -ம் ஆண்டில் ஒருலட்சத்து இருபத்தெட்டாயிரம் போத்தல் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் 1 லட்சத்து 9,500 ரூபா லாபம் கிடைத்தது, 1981-ம் ஆண்டில் சங்கத்துக்கு போத்தல் தட்டுப்பாடு நிலவிய போதிலும் ஒரு லட்சத்து 702 போத்தல் கள்ளை விற்பனை செய்ததன் மூலம் 99,798 ரூபாவை லாபமாகப்பெற்ருேம்.

விற்பனைப் பணத்திலிருந்து மாதாமாதம் சராசரி ரூபா இரண்டு லட்சத்துக்கும் குறைவில்லாமல் நாம் சங்கானை மக்கள் வங்கியில் பணததைப் போட்டுவருகின்றபோதிலும், மக்கள் வங்கியினர் எமக்குக் கடன் வசதியளிக்க முன்வருகிருர்களில்லை.

இதனுல் நாட்டின் பலபாகங்களிலிருந்தும், எமக்கு வரும் ஆடர்களை ஏற்று ஹோட்டல்களுக்கும், முகவர்களுக்கும் கள்ளைப் போதிய செலவு செய்து அனுப்பமுடியாத நிலை எமக்கேற்பட்டுள்ளது.

மக்கள் வங்கியினர் எமக்குக் கடனுதவி வழங்கினுல் இலங்கையிலுள்ள 9 மாகாணங்களுக்குமட்டுமல்லாமல் வெளிநாட்டுச் சந்தைகளையும் எமது இனிய பனங்கள் பிடித்துவிடுமென்ற நம்பிக்கை உண்டு என்ருர். (கி)

# தற்கொலை

(சாவகச்சேரி)

தச்சன் தோப்பைச் சேர்ந்த அம்பலவாணர் பவளம் (34) விவாகமாகாதவர் கிணற்றுள் வீழ்ந்து தற்கொலை செய்து கொண்டார். சாவகச்சேரி திடீர் மரண விசாரனை அதிகாரி என். தர்மேந்திரன் மரண விசாரனை நடத்தினுர். சாவகச்சேரி பொலிஸ் சின்னத்தம்பி இறந்தவரின் தகப்பனை அம்பலவாணர் சகோதரன் கிருஷ்ணபிளளை என்பவர்களை ஆஜர் செய்தார்.

மரணவிசாரனை அதிகாரி சாட்சியங்களைப்பதிவு செய்யும் பொழுது காலமானவரின் சகோதரி புற்றுநோயினுல் இறந்த நாட் தொடக்கம் இறந்த பவளம் கவலையடைநதிருந்த தாகவும் முன்னர் ஒருமுறை கிணற்றில் வீழ்ந்த அவரை மீட்டுவிட்டதாகவும் திரும்பவும் அதே கிணற்றுள் வீழ்ந்து இறநததாகவும் தெரியவந்தது மரண விசாரனை அதிகாரி என, தர்மேந்திரன் தற்கொலை எனத் தீர்பளித்தார்.

## கடற்றெழிலாளர்சமாச பொதுச்செயலாளராக தெரிவு

(பச்சிலைப்பள்ளி)

வடமாகாண கடற்றெழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொதுச் செயலாளராக திரு. கொ. சு. ஸ்ரனிஸ்லோ தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் கட்டைக்காடு சென் மேரிஸ் கடற்றெழிலாளர் விரிவாக்கசேவை சங்கம், பச்சிலைப்பள்ளி கடற்றெழிலாளர் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றில் தலைவராகவும் வடமாகாண கடற்றெழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தில் இயக்குநர் சபை உறுப்பினராகவும் இருக்கின்ருர் அத்துடன் இலங்கைத் தமிழ்பேசும் உபதபாலதிபர்கள் சங்கதில் பொருளாளராகவும், யாழ்.மாவட்ட அஞ்சல் திணைக்கள கடன் வழங்கு சபையில் உபசெயலாளராகவும் கடமையாற்றுகிருர்.


...டெட் ...லான ...னம்..

...வப்புக்களுக்கு ...% ...மானம் வட்டியும் ...ாதாந்தம்/கால் வரு ...வருடம் ...டும்.

...காப்பிற்கும் ... கூறுகின்றனர:-

| | |
|---|---|
| ...9/80 | 1980/81 |
| (...பா) | (ரூபா) |
| ...0,000 | 5,000,000 |
| ...8,0... | 20,450,000 |
| ...5,0... | ...74,094,000 |
| | ...4,723,000 |
| | ...9,154,000 |
| | 8,170,000 |
| ...1,...00 | 8,170,000 |
| ...5,...00 | 925,000 |

...ம்.

ஆளுநர்கள் சபை
என். யூ. ஜயவர்த்தன
(முதல்வர்)
ஏ. என். யூ. ஜயவர்த்தன
(பிரதி முதல்வரும் முகாமை ஆளுநரும்)
கே. விக்னராசா
(ஆலோசனை ஆளுநர்)
திருமதி. வை. என். பெரேரா
(நிறைவேற்று ஆளுநர்)
எஸ். எம். ஹுசெயின்
எஸ். பத்மநாதன்
கே. செல்வநாதன்
(பதில் எம். செல்வநாதன்)
ஆர். சேனுதிராஜா
எம். டீ. எச். ஜயவர்த்தன

பிரதான வர்த்தக அலுவல்கள்

வாடகைக் கொள்வனவு நிதி, கடன் நிதி, குத்தகை நிதி, உறுதி வசதிகள், ஊக்குவிப்பு வசதிகள், வங்கி வசதி ஏற்பாடுகள் வர்த்தகம்

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சகல வகைக் காப்புறுதிகளையும் புரியும் பிரதான முகவர்

ஏனைய விபரங்களுக்கும் சேவைகளுக்கும் நாடுக:



மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்

(1956 ஜுலை 4-ம் திகதி நிதிச்சட்டத்தின் பிரகாரம் அங்கீகாரம்பெற்றது)

51, 55, ஜனுதிபதி மாவத்தை, கொழும்பு 1.
தொலைபேசி: 26611 - 8;
சர்வதேசத் தொடர்பு இலக்கம்: 547982
அன்றேல் உங்கள் அருகே உள்ள எங்கள் கிளை நிலையத்தில்:
அநுராதபுரம்:
2, ஹரிஸ்சந்திர மாவத்தை, தொலைபேசி: 534
யாழ்ப்பாணம்:
11/8, ஸ்ரான்லி வீதி, தொலைபேசி: 321
மாத்தறை:
27, 1/1, தர்மபால மாவத்தை,
தொலைபேசி 041-2466
கண்டி:
115, (1-ம் மாடி) கொட்டுகொடலை வீதி,
தொலைபேசி: 08 - 4196
ஏனைய முக்கிய நகரங்களிலும் முகவர்கள் உள்ளனர்.
பொது மக்கள் நம்பிக்கையில் உருவான உறுதியான அமைப்பு.

இனும்!
இறக்குமதி செய்யப்பட்ட அன்ரெனு மொடல் 503 S
அத்துடன் தொலைக்காட்சி மின்கம்பி (20 யார்)
இச்சலுகை பெப்ரவரி 28 ம் திகதி வரை

அப்பழுக்கற்ற துலக்கமான படங்களுக்கு

கோல்ட் ஸ்டார்

வழங்கும்

பொன்னன சந்தர்ப்பம்

கறுப்பு - வெள்ளைத் தொலைக்காட்சிப் பெட்டிகள்
35 செ.மீ. (14") 43 செ. மீ. (17")



ஏக முகவர்கள்:
பேனேஷியா லிமிட்டெட்.
விற்பனை நிலையங்கள்
கொழும்பு: 172, கேசர் வீதி, கொழும்பு 11 தொலைபேசி: 26598, 22376
திரிகோணமலை: 57, தபால் நிலைய வீதி, திரிகோணமலை
யாழ்ப்பாணம்: 95, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்
மற்றும் நாடெங்கிலுமுள்ள பிரபல விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்
14" - ரூ. 2850/- 17" ரூ. 3500/-
ஒரு வருட உத்தரவாதம்
விற்பனைக்குப் பின் பராமரிப்புச் சேவை.

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
Michael Caine Omarsharif
Ashanti
Adults—Action—Color

வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
1—3—82 வரை
ஆதிபராசக்தி

ஸ்ரீதர் கடைசி வாரம்
தினசரி: 10:30, 2:30, 6:00, 9:30
யாழ். நகர் சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா
(புதிய பிரதி)

2-வது ஜனத்திரள் மாதம்
ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ்.நகர்) 10—30, 2—30, 4—45
7—00: 9—30
CHRISTOPHER LEE, PETER CUSHING
TELLY SAVALAS
Horror Express (Action, Suspense Thrill, Terror
Await: THE INCREDIBLE MELTING MAN

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
Mean
Machine

லிடோ
(யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
பூந்தளிர்

மனோகரா (யாழ்ப்பாணம்) இன்று மட்டும்
10—30, 2—30, 6—30, 9—30
சிவாஜி—
பத்மினி தாயே உனக்காக
1—3—82 முதல்
வாயாடி

வின்ஸர் (யாழ்ப்பாணம்) இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-கே. ஆர். விஜயா-ரஜனிகாந்த்
ஜஸ்டிஸ் கோபிநாத்

| | |
|---|---|
| 1.3.82—2.3.82 | THIEF OF BAGDAD |
| 3.3.82—4.3.82 | BLACK SUNDAY |
| 5.3.82—7.3.82 | MIGHTY HIMALAYAN MAN |

ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
செம்மீன் வெற்றிப் படத்தையடுத்து வெளிவரும்
வெள்ளி விழா சித்திரம்.
பிரதாப்
சுரேகா தக்காரா
(கலர்—மலையாளம்) (இளமை—சுகம்)
(கண்டிப்பாக. வயது வந்தவர்களுக்கு மட்டும்)

யாழ். றீகல் தினசரி 10—30, 2—30,
6—30, 9—30 நான்குகாட்சிகள்
பெண்களின் ஏகோபித்த பாராட்டுகளுடன்
காட்சியளிக்கிறது.
மூன்றுவது மகளிர் வாரம்
விஜயன்
சுருளிராஜன்
சத்தியகலா
இசை:
சங்கர்—
கணேஷ்
தனிமரம்
டைரக்ஷன்
துரை
கலர்

## தவக்கால நற்சிந்தனை



மனிதர்பேரில் அல்லது சிருஷ்டிகள்பேரில் நம்பிக்கை வைக்கிறவன் வீணன். கிறீஸ்துநாதருடைய நேசத்தைப்பற்றி பிறருக்கு ஊழியம் செய்யவும், இவ்வுலகில் ஏழையாகக் காணப்படவும் வெட்கப்படாதே. உன்பேரிலேயே ஊன்றிநில்லாமல் சர்வேசுரன் பேரில் உன் நம்பிக்கையை வை. உன்னாலானதைச் செய். சர்வேசுரன் உன் நல்ல மனதுக்கு ஒத்தாசையாக வருவார். உன் கல்வியிலென்கிலும், யாதாமொரு பிராணியின் புத்தி சூட்சத்திலென்கிலும் நம்பிக்கை கொள்ளாதே. ஆனால் தாழ்ச்சியுள்ளவர்களுக்கு உதவி செய்து, தங்களைப் பெரிதாயெண்ணுகிறவர்களைத் தாழ்த்துகிற சர்வேசுரனுடைய அனுக்கிரகத்தில் நம்பிக்கை வை.

(கிறீஸ்துநாதர் அநுசாரம்)

## வெற்றி தோல்வி இல்லை

(அரியாலை)

யாழ். இந்துக் கல்லூரிக்கும், சென்ற் பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையே சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

யாழ்ப்பாண இந்துக் கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.

சென்ற். பற்றிக்ஸ் கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ்ப்பாண இந்துக் கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது.

சென்ற். பற்றிக்ஸ் கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் 7 விக்கட்டுகளை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்று நேரம் முடிவடைந்ததால் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

யாழ்ப்பாண கிரிக்கட் மத்தியஸ்தர் சங்கத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ஆர். கனகலிங்கம், வி. கெங்காதரன் ஆகியோர் இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தனர். [க]

## அடுத்த மாதம் திறப்பு விழா

(கரவெட்டி)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பத்து லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள பிரார்த்தனை மண்டபம் அடுத்த மாத நடுப்பகுதியில் திறந்துவைக்கப்படவுள்ளது.

106 அடி நீளமும், 40 அடி அகலமும் கொண்டதாக உருவாக்கப்பட்டிருக்கும் நவீன வசதிகளைக்கொண்ட இம்மண்டபத்தில் பார்வையாளர்கள் இருக்கும் இடம் 3200 சதுர அடி பரப்பளவைக் கொண்டுள்ளது.

மண்டபத்திற்கான நிதியை உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ஒதுக்கீடு செய்திருந்தார்.

வீதி விஸ்தரிப்பு வேலை:

# அரசாங்க ஊழியர் ஒத்துழைப்பு தருவதில்லை"

### மாவட்டசபை உறுப்பினர் கவலை

[பச்சிலைப்பள்ளி]

"வீதி விஸ்தரிப்பு வேலைகளுக்கு, சம்பந்தப்பட்ட அரசாங்கஊழியர்கள் ஒத்துழைப்பு வழங்க முன்வருகிறார்களில்லை. இதனால் வீதி விஸ்தரிப்புக்கு என ஒதுக்கப்படுகின்ற பணம் உரிய முறையில் செலவழிக்கப்படாமல் போகிறது.,'

இவ்வாறு யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினரும், முன்னாள் உதவிஅரசாங்க அதிபருமான திரு. மு. தம்பிமுத்து கவலை தெரிவித்தார்.

செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் அவர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டம் வித்தியாலய அதிபர் திரு. எஸ்.எம். சர்மா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது: "கிராமங்களின் அபிவிருத்தி வேலைகளை, அவ்வப்பகுதிகளில் உள்ள பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கிராம அபிவிருததிச் சங்கம், மற்றைய பொதுஸ்தாபனங்கள் பொறுப்பெடுத்துச் செய்ய முன்வரவேண்டும். இதன் மூலமே கிராமங்களின் அபிவிருத்தி வேலைகளைத் துரிதப்படுத்தக்கூடியதாக இருக்கும். அபிவிருத்தி வேலைகளில் பின்தங்கிய பகுதிகளுக்கே முன்னுரிமை அளிசகப்படும் கல்வி அபிவிருத்திக்கும் கூடிய முக்கியத்துவம் அளிக்கப்படும்.''

சங்க இணைச்செயலாளர் திரு. வி. நடராசா நன்றி கூறினார். [க]

## நாவல் சிறுகதை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

'மல்லிகை' சஞ்சிகையின் ஆதரவில் தெணியானின் 'கழுகுகள்' என்ற நாவலும் காவலூர் ஜெகநாதனின் 'யுகப்பிரசவம்'' என்ற சிறுகதைத் தொகுதியும் எதிர் வரும் மார்ச் மாதம் 3ம் திகதி மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளன.

வெளியீட்டு விழாவிற்கு கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி தலைமை தாங்குவார்.

# 15வயது யுவதியை கடத்திச்சென்றாராம்

### இளைஞர் விளக்க மறியலில்

(சாவகச்சேரி)

ஆழியவளையைச் சேர்ந்த மாரிமுத்து யோசேப்(24வயது) என்பவர் (15வயது) இளம் பெண் ஒருவரைக் கடத்திச் சென்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் சாவகச்சேரி மாவட்டநீதிபதி எம். எச். காரியப்பர் அவரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

கந்தையா சுப்பிரமணியம் என்பவர் விசுவமடுவில் கமஞ் செய்துவருவதால் தனதுமகளை நுணுவிலுள்ள சிறியதாயாரின் பாதுகாவலில் விட்டிருந்தாரென்றும் அவரது மகள் இடையிடையே விசுவமடுவுக்குச் சென்றுவருவதாகம் சம்பவதினம் (20ம் திகதி காலை) தகப்பனிடம் போவதாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டதாகவும். தகப்பன் அங்கு செல்லாததால் அவரைத்தேடி நுணுவிலுக்கு வந்து பார்த்த பொழுது அங்கும் இல்லாத பொழுது பொலிசாரிடம் முறைப்பாடு செய்ததாகவும் ஆழியவளையில் சந்தேக நபருடன்இருந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இருவரையும் கைதுசெய்த பொலிசார் சாவாச்சேரி மாவட்ட நீதிமன்றநீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் ஆஜர்செய்த பொழுது நீதிபதி எதிரியை அடுத்த மாசம் 8ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டு வசந்தினியைத் தகப்பனிடம் ஒப்படைத்தார்.

பாஷையூர்

# புனித அந்தோனியார் வி.கழகம்சாம்பியனாகதெரிவு

(அரியாலை)

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தால் "செல்வராசா'' ஞாபகக்கேடயத்துக்காக நடத்தப்பட்ட 7 பேர்களைக் கொண்ட மின்னொளி உதைபந்தாட்டப் போட்டியில் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இப்போட்டியில் யாழ்ப்பாணம். பருத்தித்துறை, கிளிநொச்சிப் பகுதிகளைச் சேர்ந்த 15 விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொண்டன. புனிதர் அந்தோனியார் விளையாட்டுக் கழகம் முதலில் கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழகத்தை 4—0 கோல்களாலும், வைக்கிங்ஸ் விளையாட்டுக்சழகத்தை 6—1 கோல்களாலும், முஸ்லீம் விளையாட்டுக்கழகத்தை 6—1 கோல்களால் வெற்றி ஈட்டியது.

கிறீன்பீல்ட் 'ஏ' பிரிவு விளையாட்டுக்கழகத்துடன் நடைபெற்ற இறுதிப்போட்டியில் 6—3 கோல்களாலும் புனிதர் அந்தோனியார் விளையாட்டுக் கழதம் வெற்றி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர்வைத்தியகலாநிதி ஜே. பி. சி. பிலிட்ஸ் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் திருமதி பிலிப்ஸ் பரிசில்களையும் சுற்றுக்கேடயத்தையும் வழங்கினார் பாஷையூர் புனிதர் அந்தோனியார் விளையாட்டுக்கழகத்திற்கு 'செல்வராசா' நினைவுச் சுற்றுக்கேடயமும், தனிப் போட்டியில் 9 கோல்களைப் போட்ட நாவாந்துறை சென்ற் மேரிஸ் விளையாட்டுக்கழகத்திற்கு வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட்டது.

சிறந்த உதைபந்தாட்ட வீரர்களாக புனிதர் அந்தோனியார் வி. கழசத்தலைவன் அ. மமான்ஸூம் கிறீன்பீல்ட் வி. கழகத்தைச் சேர்ந்த அ. நந்தனும், சென்ற் மேரிஸ் வி. கழகத்தைச் சேர்ந்த வீ. பிரான்சிஸ்ஸூம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. இறுதிப் போட்டிக்கு திரு. இ. க. குமரையா மத்தியஸ்தம்வகித்தார். (க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மினிவான் (Morris) முற்றிலும் சீரமைக்கப்பட்டது. ரயர், பற்றறி புதியது. கலனுக்கு 40 மைலுக்கு மேல் ஓடக்கூடியது. தொடர்பு: 37, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். 2363

எங்களிடம் அடைவு கடைகளுக்கும், வியாபார ஸ்தாபனங்களுக்கும், வீட்டுப்பாவனைக்கும் உகந்ததுமான இரும்புப் பெட்டிகள் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம். இரும்புப்பெட்டி தயாரிப்பாளரும் பழுதுபார்ப்பவர்களும், ''எவர் சில்வர் மாளிகை'' 11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 2394

வெளிநாட்டு மாபிள்மேசை, பலகார சோக்கேஸ் 6 x 4, கவுண்டர் பொயிலர் மற்றும் தளபாடச் சாமான்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 26, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 2398

உயர் ரக அல்சேஷன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. 151, 2—ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (2418)

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி றோட்டில் ஒரு பரப்புக் கொண்ட 4 கடைகள் விற்பனைக்குண்டு. (இல. 89, 89/1, 89/2, 26) தொடர்பு கொள்க. ஆ. நல்லதம்பி, 183 (புது நம். 141) நாவலர் றோட், யாழ்ப்பாணம். (2410)

கண்டி றோட் அரியாலைச் சந்தியில் இருந்து கிழக்கு அரியாலை வீதியில் 3 மைல் தூரத்தில் பஸ் போக்குவரத்துடைய நல்ல தண்ணீர் வசதியுடைய 5 ஏக்கர் தென்னங்காணி மொத்தமாகவோ அல்லது 3 அல்லது 4 பரப்புத் துண்டுகளாகவோ உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. ப. மாணிக்கராஜா, 67, நெடுங்குளம் றோட், அரியாலை, யாழ்ப்பாணம். (2416)

நெல் உடைக்கும் மெசின் (Rice Huller, Craiu) புத்தம் புதியது விற்பனைக்கு உள்ளது. முகவரி; செ. கிருபானந்தன், இருபாலைச் சந்தி, கோப்பாய். (2419)

உடுவில் மெயின் வீதியில் மருதனுமடச் சந்தியில் இருந்து 150 யார் தொலைவில் இராமநாதன் கல்லூரிக்கும் உடுவில் மகளிர் கல்லூரிக்குமிடையில் சச்சதுரமான $3\frac{1}{2}$ பரப்புடைய நல்ல காணி விற்பனைக்குண்டு. தரகர் இல்லாத, கூடிய விலை கொடுத்து வேண்டத்தக்க கண்ணியமானவர்கள் தொடர்பு கொள்ளவும். திருமதி பொ. நேசம்மா, வல்லை வீதி, சங்கானை. (2420)

## தேவை

பாதுகாவலர்கள் தேவை. நற்சான்றிதழ்களுடன் 3—3—82 காலை 10 மணிக்கு நேரில் வரவும். பாதுகாப்புச் சேவை, புகையிரத வீதி, தெல்லிப்பழை. (2412)

கொழும்பில் வசிக்கும் குமாஸ்தாவுக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட ஒரு அறை தேவை. விபரங்களுக்கு: சி. பிரபாகரன், 226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (தொலைபேசி 8088) 2383

உயிலங்குளம் சந்தியில் சட்டட வசதிகள் உள்ள இடத்தில் அரிசி ஆலை அல்லது பொருத்தமான தொழில் ஆரம்பிப்பதற்கு அனுபவமுள்ள நிர்வாகப் பங்காளி தேவை. T. பரமானந்தன், ஆஸ்பத்திரி வீதி, மன்னார். 2358

ஸ்ரூடியோ ஒன்றிற்கு சகல துறையிலும் அனுபவம் உள்ள நற்குணம் உடைய வேலையாள் தேவை விண்ணப்பிக்கவும்: விளம்பர இல 2348, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2348

கணக்காளராக தொழில் புரியும் I.C.M.A. Fir alist க்கு பயிற்சி உதவியாளர் தேவைப்படுகிறது. கணக்கியலில் பயிற்சி கொடுக்கப்படும். கணக்கியல் பயிலும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஞாயிறு 28ம் திகதி சான்றிதழ்களுடன் பி.ப, 1-30 மணிக்கிடையில் நேரில் வரவும். ச. ராஜகுமாரசுவாமி மே/பா அப்பையா, ஜி. ஜி. பொன்னம்பலம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 2403

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் 2 அல்லது 3 படுக்கை அறைகளுடன் சகல வசதிகளைக் கொண்ட வீடு விலைக்குத் தேவை. தொடர்பு கொள்க: பிலிப் அலெக்சாண்டர், இல: 8, 1ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8154 (2335)

நேர்த்தியான தையலும், திறமையும், அனுபவமுமுடைய தையல் செய்யும் பெண்கள் தேவை, நேரில் வரவும், யோகா தர்மசீலன், 33, அரச வீதி, உரும்பராய் கிழக்கு. (2421)

## வகுப்பு

Ch·rtered pr·lim 1982 தமிழ் மூல வகுப்புகள் 1—3—82 பிற்பகல் 2—00 மணிக்கு ஆரம்பமாகின்றன. K. G's Ias ilu e, 37, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். (2409)

## பயிற்சி

பின்வரும் தொழில் நுட்பப் பயிற்சி வகுப்புகள் 1—3—82 காலை 8—30 மணிக்கு ஆரம்பமாகின்றன. **Radio officers (P. M. G) Ship, Radio and Television, Electric wiring, Hotel management**, சான்றிதழ்கள் வழங்கப்படும். **K G's Institute**, 37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (2408)

## வாடகைக்கு

சிறிய வெல்டிங் தொழில்—கார் ரிப்பெயர் சம்பந்தப்பட்ட ஏதாவது தொழில்—களஞ்சியம் போன்றவற்றிற்கும் பாவிக்கக்கூடிய 200 சதுர அடி பரப்பளவுள்ள கடைக்கட்டிடம் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு உண்டு: 464, மணிக்கூட்டு வீதி, (ரசிகரஞ்சனசபா அருகில்) யாழ்ப்பாணம் (2417)

நாச்சிமார் கோவிலுக்கு அருகாமையில் கே. கே. எஸ். வீதியில் சகல வசதிகளுடனுன பாதுகாப்பான வீட்டில் மாணவிகள் பெண் உத்தியோகத்தர்கள் தங்குமிடவசதியுண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2411, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (2411)

## யாருடையது?

காங்கேசன்துறை வீதியில் கோண்டாவில் மேற்கில் பண்டாரமடம் பஸ்தரிப்பில் பெண்களுக்குரிய பணப்பையொன்று க. ரகுபதி என்ற மாணவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

## இன்று கொடி விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூலக வாரத்தையொட்டி நல்லூர்த் தொகுதியில் இன்று காலை கொடி விற்பனை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் தலைமையில் இளைஞர்கள் இக்கொடிகளை விற்பனை செய்வார்கள். (மா)

## பாலசரஸ்வதியின்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுப்பதால் ஒரு சபாவிற்கு மறைமுகமாக சில நன்மைகள் உண்டாகின்றன என்பதோடு மட்டுமல்லாது, நேரடியாகவே அவர்கள் நிதியுதவிசெய்து தங்கள் வீட்டுக் குழந்தையின் கச்சேரிக்கு ஏற்பாடுசெய்துகொள்ளும் அளவுக்கு இன்று துர்த்தசை ஏற்பட்டிருக்கிறது. சரஸ்வதி ஆலயங்களாக இருக்கவேண்டிய சபாக்கள் தனவக்ஷ்மியின் கேளிக்கை ஸ்தலங்களாக உருக்குலையும் இந்த அநீதத்துக்குப் பரிகாரம் காணும் வரையில் நாம் கலையைப் பற்றியும்! கலாச்சார வளர்ச்சி பற்றியும் பேசுவதெல்லாம் கேலிக்கூத்து என்றே நினைக்கிறேன். கலைத்துறையில் லஞ்சம் என்றால் பின்னர் பண்பாட்டைக் காப்பது எப்படி? அநேகமாக இந்தப் பெரிய மனுஷயர்கள் வீட்டுக் குழந்தைகளுக்கு நாட்டியம் ஒரு பொழுதுபோக்காகத்தான் இருக்கிறது.

கலைத் தகுதி ஒன்றை மட்டும்வைத்து கச்சேரிகள் கொடுக்கும் காலம் வருவதற்கு எல்லோரும் ஒத்துழைக்கக் கோருகிறேன். பிரமுகர்களும், பத்திரிகைக்காரர்களும் இவ் விஷயத்தில் அழுத்தமாகப் பேசியும், எழுதியும் நிலைமையை மாற்ற உதவிபுரிய வேண்டும் என்று கலைத்தெய்வத்தின் முன்னிலையில் வேண்டிக்கொள்கிறேன். இதுவரை நடனக்கலை பயில்பவரைப் பற்றிச் சொன்னேன். இனி இக் கலையைப பற்றியும், இதை இன்றுள்ள உருவத்தில் அமைத்துக்கொடுத்தவர்கள் பற்றியும் சிறிது கூறப் பிரியப்படுகின்றேன். (தொடரும்)

## பத்திரிகையாளர்....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கவே போய்விட்டன, இப்போது புதிதாக இந்தச் செய்தி வந்துள்ளது. இதுவும் பழைய கதையாகிவிடுமோ தெரியவில்லை.

இந்த நாட்டில் மிகவும் புறக்கணிக்கப்பட்ட ஒரு கூட்டம் இருக்குமானால் அது நிச்சயமாக உழைக்கும் பத்திரிகையாளர்களாகத்தான் இருக்க முடியும். இவர்களுக்கென ஒரு சம்பளத் திட்டமோ, தொழில் பாதுகாப்போ கிடையாது. ஏனைய வர்த்தகத்துறை ஊழியர்களைப் போலவே இவர்களும் கணிக்கப்படுகிறார்கள். சில சமயங்களில் அதையும்விட மிகவும் பரிதாபகரமான நிலைமைகளில் அவர்கள் பணியாற்றுகிறார்கள்.

ஒரு நாட்டில் ஜனநாயகம் செம்மையாகச் செயல்பட வேண்டுமானால் பத்திரிகைத் துறை சுதந்திரமாகவும், இடைஞ்சல் இன்றியும் இயங்க வேண்டும். ஆனால் பத்திரிகையாளர்கள் வசதியற்றும் போதிய பாதுகாப்பின்றியும் இருக்கும் நிலையில் பத்திரிகைத் துறை எங்ஙனம் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் செயல்பட முடியும்?

இந்த நிலைமையை ராஜாங்க அமைச்சர் மிகவும் நன்றாக உணர்ந்திருக்கிறார் என்பதை அவர் எடுத்துவரும் நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன. அவை பயனளிக்கவேண்டும்—பத்திரிகையாளர்களின் குறைகள் தீரவேண்டும். இவர்களின் நிலைபற்றி ஆராய அமைச்சர் ஒரு குழுவை நியமித்தால்கூட நன்றாய் இருக்கும்.

டிராக்டர் விற்பனைக்கு

37 ஸ்ரீ 2017 இன்டமோட்டோ டிராக்டர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.

விபரங்களுக்கு:

M. R. நித்தியானந்தன்

பலாலி றோட்,
உரும்பராய் தெற்கு. 2405

காகிதாதிகள்-
பாடசாலை உபகரணங்கள்
மின்சார உபகரணங்கள்
மின்னியல் பொருட்கள்
மின்சார பாவனைப் பொருட்கள்

அன்பளிப்புப் பொருட்களுக்கும்

அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகளும், மின்சார ஒப்பந்தகாரரும், விற்பனையாளரும்)

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(போன் : 8291 தந்தி : ''வாணர்சன்ஸ்'')
(கடைத்தெரு பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக)

தலைமையகம் :

பேர்ள் லேட்ஸ் - அம்பலவாணர் சன்ஸ்

78, மலிபன் வீதி, கொழும்பு 11.
போன் : 24821 — 28244

லெட்சுமிபவான்,

97, ஒல்ஹொட்மாவத்த, — — கொழும்பு - 11

### யாழ். பொதுசன நூலக

# நிதி சேர்வுகள்பற்றி இன்று யாழ்.முதல்வர் அறிவிப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ்' மாநகராட்சி மன்ற 'நூலகவார' இறுதி நாளை யொட்டி இன்று மாலை, யாழ். நகரமண்டபத்தில் பொதுக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

திரு. கே. ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி மன்றக்கீதம்பாடுவார். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

'நூலக கொடித்தின' நிதி சேர்வுகளின் விபரங்கள் பற்றி மாநகரமுதல்வர் இக்கூட்டத்தில் தெரிவிப்பார்.

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், மாநகர சபை உறுப்பினர்களான ஜனுப். ற. மு. இமாம், திரு. து. சாந்திகுமார், திரு. யோ. அ. செல்வநாயகம், த. வி. கூட்டணித்தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

யாழ். பொதுசன நூலகக் கட்டிட நிதிக்காகக் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் இன்றுவரை ஒருவாரத்துக்கு நூலகவார கொடித்தினத்தை அனுட்டிப்பதென யாழ் மாநகரசபை முடிவு செய்திருந்தது தெரிந்ததே. (மா)

### ஒரு லட்சரூபா பொருட்கள்:

# கடத்தல் முயற்சி முறியடிப்பு!

(யாழ்ப்பாணம்)

ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள், இந்தியாவுக்கு கடத்திச் செல்லப்பட்ட முயற்சி பொலிசாரால் முறியடிக்கப்பட்டது.

மன்னாரில் ஒலித்தொடா என்ற இடத்தில் இக்கடத்தல் சம்பவம் இடம்பெற்றது'

வள்ளம்மூலம்ஒருலட்சம்ரூபா பெறுமதியான மோட்டார் உதிரிப்பாகங்கள், காற்சட்டைத்துணிகள் இந்தியாவுக்குக் கடத்திச் செல்லப்பதாக மன்னார் பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைத்ததைத் தொடர்ந்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். குணவர்த்தன தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர், அப்துல்கரீம், எம். பரூக் ஆகிய இருவரையும் கைதுசெய்ததுடன், பொருட்களையும் கைப்பற்றி மன்னார் சுங்க இலாகா கலெக்டரிடம் ஒப்படைத்துள்ளனர். விசாரணை நடைபெறுகிறது.

### இ. த. ஆ. சங்க ஆட்சி மன்றம்

## 3 முக்கிய பதவிகளுக்கு நான்குமுனைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க ஆட்சி மன்ற அலுவலர் தேர்தல் நடைபெறவிருக்கிறது.

சங்கத்தலைவர், பொதுச்செயலாளர், நிதிச்செயலாளர் ஆகிய மூன்று முக்கிய பதவிகளுக்கும் நான்கு வேட்பு மனுக்கள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன.

தலைவர் பதவிக்கு தற்போதைய சங்கத்தின்தலைவர் திரு. டி. எஸ்.கே.வணசிங்காவுடன் முல்லைத்தீவுக் கிளைச்செயலாளர் திரு. ச. முத்தையா, ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த திரு. சு. சிற்றம்பலம், ஊரெழு ஸ்ரீ கணேச வித்தியாலய அதிபர் திரு. ச. கதிரவேலு ஆகியோர் லேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

பொதுச் செயலாளர் பதவிக்கு தற்போதைய பொதுச் செயலாளர் திரு. த.மகாசிவம் இ. த. ஆ. சங்க கொழும்பு மாவட்டச் செயலாளர் திரு. இ சண்முகசர்மா, கோண்டாவில் சைவ தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த திரு. சு. தில்லையம்பலம், ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த திரு. ஐ. சிற்றம்பலம் ஆகியோர் வேட்பு மனுவைத்தாக்கல் செய்துள்ளனர்.

நிதிச்செயலாளர் பதவிக்கு தற்போதைய நிதிச்செயலாளர் திரு. நா. நடராஜாவுடன் தற்போதைய நிர்வாகச்செயலாளர் திரு நா. சோதிநாதன் கோண்டாவில் சைவதமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த திரு சு. தில்லையம்பலம், சாவகச்சேரி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த திரு. பி. கைலாசபிள்ளை ஆகியோர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

நிர்வாகச் செயலாளர் பதவிக்கு 7 வேட்பு மனுக்களும் கல்வி கலாச்சார செயலாளர் பதவிக்கு 3 வேட்பு மனுக்களும் பிரசாரச் செயலாளர் பதவிக்கு 11 வேட்பு மனுக்களும் பத்திரிகைச் செயலாளர் பதவிக்கு 5 வேட்பு யனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நான்கு துணைத்தலைவர் பதவிகளுக்காக 23 வேட்பு மனுக்களும் மூன்று துணைச் செயலாளர் பதவிகளுக்காக 21 வேட்பு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக்க் கூறப்படுகிறது.

### பொலிஸ் நிலையக் கொலை வழக்கு:

# எதிர்தரப்பு சட்டத்தரணி கருத்தினுல்விசாரணை நிறுத்தம்

(கொழும்பு)

கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலைய கொலை தொடர்பான விசாரணை மீண்டும் கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆரம்பமான போது எதிரி தரப்பு சட்டத்தரணி கூறிய ஒரு கருத்தையடுத்து நீதவான் தமது அறைக்குள் சென்றுவிட்டார். இதன் காரணமாக வழக்கு விசாரணை சுமார்அரை மணிநேரம்தாமதமடைந்தது.

எதிரி தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணிதிரு.ஏ டி.கொய்சா நீதவான் ஏற்கனவே அளித்துள்ள தீர்ப்பு ஒன்று பற்றி தமதுகருத்தைவெளியிட்டார். நீதிமன்றத்தில் மாறுபாடான சாட்சியம் அளித்துள்ள ஒரு சாட்சியின் சாட்சியத்தின் மீதான தமது கருத்தைக் கொண்டு நீதவான் கொலை என்ற தீர்ப்புக்கு வந்துள்ளார் என்று திரு. சொய்சா குறிப்பிட்டார் வழக்குத்தொடுநர் தரப்பு சாட்சியான ஏக்க நாயக்கா மைத்திரிபால என்ற சாட்சி தாம் முன்பு கூறியசாட்சியத்தை நேற்றுமுன்தினம் மாற்றிக்கூறினுர். இந்தச்சாட்சியின் கூற்றையே சட்டத்தரணி குறிப்பிட்டு தமது கருத்தை வெளியிட்டார்.

இந்தக் கட்டத்தில் நீதவான் திரு. சந்திர தாச நாணுயக்காரா குறுக்கிட்டு காட்சியங்களின்மீது தமது கருத்தை உருவாக்கிக்கொள்ள தமக்கு உரிமையுண்டு என்று கூறினுர். மேலும் அவர் கூறுகையில், திரு. சொய்சா இந்த வழக்கில் என்னை எதிரியாகக் கருதுகிருர் போலிருக்கிறது. நான் கண்ணியமான மனிதன். நான் வகிக்கும் பதவியைவிட எனக்கு அதிக பெறுமதியுண்டு எனக் கருதுபவன். நான் பதவியை ராஜினுமா செய்து விட்டு நீதித்துறை அதிகாரிகள் கண்ணியமாகவும் சுதந்திரமாகவும் பணியாற்றமுடியாத நிலைமை ஏற்பட்டு விட்டதாக ஜனுதிபதியிடம் தெரிவித்துவிடத் தயாராய் இருக்கிறேன். சிரேஷ்ட சட்டத்தரணியான திரு. சொய்ஸாவின் நடத்தை மிகவும் வியப்பளிப்பதாகவிருக்கிறது என்ருர்.

திரு. சொய்ஸா: நீங்கள் தவருகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள் ஐயா இந்த மாதிரியான சாட்சிகளை நம்பக் கூடாது என்பதையே நான் வற்புறுத்தவிரும்பினேன். நீதவான் தமது கருத்தை சாட்சியத்தின் அடிப்படையாக வைத்து உருவாக்கக் கூடாது என நான் கூறவில்லை. கடந்த 30 ஆண்டுகால எனது அனுபவத்தில் நீதிமன்றத்தை மிகவும் கௌரவமாகவே கருதிவந்துள்ளேன். என்ருலும் எனது குறிப்பு உங்களைப் புண்படுத்தியிருந்தால் மன்னிப்புக்கோருகிறேன்.

**நிதிசேகரிப்பை...**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தை நேற்று யாழ் முதல்வர் திரு ராஜா விசுவநாதன், மாநகர ஆணையாளர் திரு. கே.சிவஞானம் ஆகியோர்ஆரம்பித்து வைத்தனர்.

**பாகிஸ்தான்...**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாகிஸ்தானின் இராணுவ அரசாங்கத்தைக் கவிழ்ப்பதையே இலட்சியமாகக் கொண்டதென்றும், பூட்டோவின் மகனைத் தலைவராகக் கொண்ட இந்த இயக்கம் ஆப்காணிஸ்தானில் தலைமறைவாக இருந்து வருகிறதென்றும் பாகிஸ்தானின் இராணுவ ஆட்சி தெரிவிக்கின்றது.

பூட்டோவின் சொந்த மாகாணமான சிந்து மாகாணத்தில் மட்டும் இதுவரை சுமார் 742 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்களிடமிருந்து பெருந்தொகையான ஆயுதங்கள், கைப்பற்றபட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது,

## யாழ்.இந்து மண்டபத்தில் 7வதுஆண்டுநிறைவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க ஏழாவது ஆண்டு நிறைவுப் பேரவைக் கூட்டம் யாழ். இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 5ம் திகதி காலை நடைபெறவிருக்கின்றது.

சங்கத்தலைவர் திரு. வணசிங்கா தலைமையில் நடைபெறவிருக்கும் கூட்டத்துக்கு அரச அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. எம். பி. சி. ருவ்வா பிரதம விருந்தினராகவும் விசேட அதிதியாக ஜெர்மன் தொழிற்சங்கப் பிரதிநிதியும் யூட்ரிச் ஈ. பேர்ட் மன்றப்பிரதிநிதியுமான திரு. ஸ்டெபன் குரூபட்டும் கௌரவவிருந்தினர்களாக யாழ்.கல்விப்பணிப்பாளர் திரு. க.சிவநாதனும் கல்வி அமைச்சு கணக்காளர் திரு. இராஜ் சுப்பிரமணியமும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் சங்கப் பிரமுகர்கள் சிலர் பாராட்டப் படவிருக்கின்றனர். அன்று மாலை அதேமண்டபத்தில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன.

## இன்று

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் முன்னை நாள் பொதுச்செயலாளரும், இளைப்பாறிய அதிபரும், பிரபல சமய சமூக ஊழியருமான கோப்பாய் க. இ. குமாரசாமிக்கு இலங்கைஅரசு சமீபத்தில் சமாதான நீதிபதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தமையைப் பாராட்டி ஆசிரியர்கள் இன்று விழா எடுக்கின்றனர்.

இன்று ஞாயிறு பிற்பகல் யாழ். வீரசிங்கம் மணடபத்தில் நடைபெறவுள்ள இவ் விழாவுக்கு அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் முன்னைநாள் தலைவர் திரு. இ. கந்தையா தலைமைவகிப்பார். ஆசிரியர் தொழிற்சங்கப் பிரமுகர்கள் பலர் இவ்வைபவத்தில் பாராட்டுரை வழங்குவார்கள். (அ)

**4 கூட்டணி...**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து சம்பந்தப்பட்ட 4 கூட்டணி உறுப்பினர்களிடம் விளக்கம் கோருவதெனச் செயற்குழு தீர்மானித்தது. (மா)


## தேவை

எழுதுமட்டுவாள். பளை அல்லது அதன் அருகாமையில் ஓர் தென்னந்தோட்டம் தேவை. இடம் விலை முதலிய விபரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும், விளம்பர இல; 2401 மே/பா ஈழநாடு லிமிட்டெட் யாழ்ப்பாணம்.

2401


## மரணஅறிவித்தல்

### நாகலிங்கம் கருணைநந்தம்

கொழும்புத்துறையை பிறப்பிடமாககொண்ட இளைப்பாறிய ஆசிரியர் நாகலிங்கம் கருணைநந்தம் காலமாகிவிட்டார் இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் அமிர்தகுமாரி ஜெகதீஸ்வரன் (லண்டன்) இன் தந்தையும் ஜெகதீஸ்வரனின் மாமனுரும் பாலசுப்பிரமணியம்-தில்லைநாயகியின் சகோதரரும் ஆவர். அன்னரின் ஈமக்கிரியைகள் 1—3—82 திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் ''அதிகார் வாசா'' ஆனைக்கோட்டையில் இருந்து எடுத்துச் செல்லப்படும் உற்ருர் உறவினர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

2424

## புதிய பாராளுமன்றம் ஏப். 27ல் திறக்கப்படும்?

[கொழும்பு]

கோட்டை ஜயவர்தனபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய பாராளுமன்றக் கட்டிடம் ஏப்ரல் 27ம திகதியளவில் திறந்து வைக்கப்படலாம் என்று நம்பகமாகத் தெரியவருகிறது.

புதிய கட்டிடத்தைத் திறந்து அன்றையதினம் ஜனுதிபதி பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் கொள்கை விளக்க உரைநிகழ்த்துவார்.

ஜனுதிபதியின் கொள்கை விளக்கஉரையை அடுத்து பாராளுமன்றம் கலைக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போதைய பாராளுமன்றம் மார்ச் 10, 11, 12ம் திகதிகளில் மீண்டும் கூடுகின்றது. அதன் பின் சபைக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படலாம். [ம]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி. 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி 7707, 389, 8126.